[1st April 1965

கூட்ச் சாப்பிட்டார்கள் என்பதை நாம் அறிவோம். அந்த நிலை இனி ஏற்படாது என்பது என் நம்பிக்கை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, so far as raw rice is concerned, the quality is very good and we are thankful to the Government. But so far as boiled rice is concerned, the quality is not so good. Will the Government take steps to see that they give good boiled rice to the City of Madras?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member has stated that it is not bad. So, she would like to have better rice. Our efforts are to get better rice.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்ற ஆண்டு சில மாதங்கள் வாழ்நாளில் நாம் கண்டு இருக்க முடியாத அரிசியைச் சந்தித்தோம். அத்தகைய மோசமான அரிசியைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். இருந்தாலும் அப்படி இந்த அரசாங்கத்தை ஏமாற்றியவர்கள் யார் ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : எங்கிருந்து வந்தது, எப்படி வந்தது என்ற சர்ச்சையில் நான் போகவில்லை. இனி அந்தமாதிரியான நிலை வராதவாறு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

திரு. எஸ். முருகையன் : நல்ல நெல்லுக்கு நல்ல அரிசி வேண்டும் என்று சொன்னார்கள். எவ்வளவு நல்ல நெல்லாக இருந்தாலும், அரைத்த அரிசி நல்லதாக இருந்தாலும் சாக்கில் கட்டி 90 நாட்களுக்கு மேல் இருந்தால் விறைகப்போய்விடும். சர்க்கார் அதிகாரிகள் அது விஷயத்தில் கவனம் காட்டுவதில்லை. ஆகவே தான் தனிப்பட்ட வியாபாரிகளிடமே ஆலோசனை கேட்டு அரிசி கெடாமல் இருக்க வழிவகை தெரிந்து 90 நாளைக்கு ஒரு முறை கீழே கொட்டி, சாக்கில் கட்டி அரிசி கெடாமல் இருக்க வழிவகை செய்வார்களா, என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்காகத்தான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறிய ஆலோசனையைக் கூடக் கேட்காமல் நெல்லாகவே ஸ்டாக் செய்கிறோம்.

பொன்னம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் நிதி கையாடல்

* 412 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் }
திரு. க. ர. நல்லசிவம் : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கேள்வி எண் 194-க்கு 1963 ஆகஸ்ட் 17-ல் அளித்த பதிலை யொட்டி சேலம் பொன்னம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூபாய் 15,646 கையாடல் செய்யப்பட்டது பற்றிய விசாரணை முடிந்துவிட்டதா ? அதன் முடிவு என்ன ?

1st April 1965]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மேலும் புலனாய்வு நடத்துவதற்காக இது இப்போது போலீசாரிடம் முடிவுறா நிலையில் உள்ளது.

Jaggery manufacturing co-operative societies

* 413 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of jaggery manufacturing co-operative societies established so far in the State and the number of tappers employed therein?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (1) இதுவரை நம் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,482.

(2) இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் எண்ணிக்கை 1,90,441 ஆகும்.

திரு. கோ. சி. மணி : மது விலக்குச் சட்டத்தின் காரணமாக வேலையை இழந்தவர்களில் எத்தனைபேர் இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : நான் சொன்ன மொத்த எண்ணிக்கையில் அவர்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

Chettipatti Labour Contract Co-operative Society, Dharmapuri

* 414 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the date of formation of the Chettipatti Labour Contract Co-operative Society in Dharmapuri division;

(b) the nature of financial assistance so far extended; and

(c) its present financial position?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) செட்டிப்பட்டி, "ஆர். வி. ஹரிஜன கூட்டுறவு தொழிலாளர் ஒப்பந்தச் சங்கம் லிமிடெட்", 1-9-1960-ல் பதிவு செய்யப்பட்டு, 5-9-1960-லிருந்து தன்பணியை ஆற்றத் தொடங்கியது.

(இ) இதன் தொழில் மூலதனத்திற்காக அரசாங்கம் ரூ. 50,000 வட்டியில்லாக் கடனுகை வழங்க அனுமதித்துள்ளது. இதில் ரூ. 45,000 சங்கத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது. இந்தக் கடன் வாங்கியதிலிருந்து ஆறாவது ஆண்டு முதல் 20 சம ஆண்டுத் தவணைகளில் இக்கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

(உ) 30-6-1964 வரை இச்சங்கம் ரூ. 16,056.18 நஷ்டத்தில் பணியாற்றிவந்தது.

நொய்யல் ஆற்றின் உற்பத்தி இடத்தில் அணை

* **415 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் நொய்யல் நதி உற்பத்தியாகும் பகுதியில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?